
காம்பியின் விளக்குகள்




காம்பியின் விளக்குகள்



பழைய பொருட்கள் விற்கப்படும் சந்தை வசந்த காலத்தின் முதல் நாளில் திறக்கப்பட்டது. காம்பியும் நானும் கடை கடையாக சுற்றி வந்தோம். நான் ஏற்கனவே ஒரு பொம்மை வாங்கி விட்டிருந்தேன். காம்பி இன்னும் எதையோ தேடிக் கொண்டிருந்தார். அவர் என்ன தேடுகிறார் என்பது எனக்குத் தெரியும்.

காம்பியின் கண்கள் ஒளிர ஆரம்பித்தன. "நான் தேடிக்கொண்டிருந்த பொருள் கிடைத்துவிட்டது என்று நினைக்கிறேன், பிரெண்டா," என்று என் காதுக்குள் கிசுகிசுத்து ஒரு கண்ணாடி குடுவையைச் சுட்டிக்காட்டினார். அதன் கைப்பிடி காது போல இருந்தது. நான் அதை எடுத்து அதன் கண்ணாடியை விரலால் வருடினேன். நான் கேட்டேன் "இது ஒரு மண்ணெண்ணெய் விளக்கு தானே?" .
"சரியாகச் சொன்னாய்" என்றார் காம்பி.




நாங்கள் வீட்டை அடைந்ததும் அம்மா கோபத்துடன் “இன்னொரு ஓட்டை ஒடிசலா?” என்றார்.

"இன்று மெய்யாலுமே எனக்கு ஒரு விலைமதிப்பற்ற பொருள் வெறும் ஐந்து ரூபாய்க்கு கிடைத்தது!" என்ற காம்பி, விளக்கை உற்சாகமாகக் காட்டினார்.

அம்மா கேலியாக, "உங்களிடம் ஏற்கனவே இத்தகைய விளக்கு ஒன்று இருக்கிறதே" என்றாள்.

"இதே போல இல்லை" என்று சிரித்த காம்பி சொன்னார் "இது கொஞ்சம் வித்தியாசமாக இருக்கிறது பார்".



காம்பி என் அம்மாவின் தாத்தா, எனக்கு கொள்ளுத் தாத்தா. காம்பி பழைய காலத்து விளக்குகளை ஆர்வத்துடன் சேகரிக்கப்பார். சந்தையிலும், பழைய பொருட்களை விற்கும் கடைகளிலும் அவற்றைத் தேடித்தேடி வாங்குவார்.

இந்தப் பழைய விளக்குகளால் ஒரு பயனும் இல்லை என்று என் அம்மா நினைத்தார். ஏனென்றால் அவற்றில் மின் கம்பிகள் இல்லை, பல்பு மாட்ட முடியாது.

மின்சாரம் என்பது இல்லாத காலத்தில் செய்யப்பட்டவை இந்த விளக்குகள். அந்த காலத்தில் மின்சார விளக்குகள் இல்லை, பேட்டரியால் இயங்கும் டார்ச்சுகள் இல்லை. இந்த விளக்குகளில் மண்ணெண்ணெய் ஊற்ற வேண்டும். விளக்கில் இருக்கும் திரியைப் பற்ற வைத்தால் அதன் வழியாக எண்ணெய் எரிந்து வெளிச்சம் கொடுக்கும்.

இந்த தகவல்கள் அனைத்தும் காம்பியிடமிருந்து தான் எனக்கு கிடைத்தன. அவர் வேலையில் இருந்து ஓய்வு பெற்றதிலிருந்து பழைய விளக்குகளை சேகரிக்கத் தொடங்கினார். சில வருடங்களில் எங்கள் சிறிய வீடு பழைய விளக்குகளால் நிரம்பிவிட்டதாக அம்மா சொன்னதால், காம்பி வீட்டின் நிலவறையில் அனைத்து விளக்குகளையும் அடுக்கி வைத்தார்.

காம்பியுடன் நானும் லிப்ட் மூலம் அடித்தளத்திற்கு வந்தேன். அவர் பூட்டைத் திறந்து லைட் சுவிட்சை போட்டதும் நாங்கள் அந்த சிறிய அறைக்குள் நுழைந்தோம்.

சுவர்களில் பதிக்கப்பட்டிருந்த அலமாரிகளில் விளக்குகளும் உதிரி பாகங்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பளிச்சிடும் கண்ணாடி புகைபோக்கிகள் ஒரு வரிசையில் வைக்கப்பட்டிருந்தன. சில விளக்குகள் சிறியதாகவும் வட்ட வடிவமாகவும் இருந்தன. சில உயரமாகவும் கவர்ச்சியாகவும் இருந்தன. சில தகரத்தில் செய்யப்பட்டிருந்தன. சில விளக்குகள் அலங்கார வடிவங்களுடன் இருந்தன. அறையின் தரையில் விளக்குகளை சரிசெய்யத்தேவையான உதிரி பாகங்களின் பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.





இந்த விளக்குகள் பல ஆண்டுகளுக்கு முன்பு இந்த உலகில் வாழ்ந்தவர்களுக்கு சொந்தமாயிருந்தவை. எனக்கு அவர்களைப் பற்றி சிந்திப்பது மிகவும் பிடிக்கும். நூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்த என் வயது பெண்ணை நான் கற்பனை செய்து பார்த்தேன். ஒவ்வொரு இரவும் அந்தப் பெண் கையில் ஒரு சிறிய விளக்கைப் பிடித்துக்கொண்டு அதன் மங்கலான வெளிச்சத்தில் படுக்கையறைக்குப் போவதையும் பிறகு விளக்கை ஒரு மேஜை மேல் வைத்துவிட்டு அவள் படுக்கையில் படுப்பதையும் படுத்தபிறகும், எண்ணெய் தீர்ந்து தானாக அணையும் வரைவிளக்கு எரிந்து கொண்டே இருப்பதையும் கற்பனை செய்து பார்த்தேன்.

காம்பி தனது புதிய விலைமதிப்பற்ற விளக்கை, அதே போல் இருந்த மற்றொரு விளக்குக்கு அருகில் வைத்து அழகு பார்த்து மகிழ்ச்சியுடன் சிரித்துக்கொண்டார்.



"இன்று எந்த விளக்கைப் பற்றி பேசலாம்?" என்று கேட்டார் காம்பி. அழகிய கைப்பிடியோடு வளைந்து நெளிந்திருந்த ஒரு விளக்கை காட்டினேன்.

"இந்த விளக்கு அநேகமாக அலாவுதீனுடையதாக இருக்கலாம்" என்று கூறிய காம்பி "அலாவுதீன் யார் என்று உனக்குத் தெரியும் தானே?" என்று என்னிடம் கேட்டார்.

"ஓ! நான் சினிமாவில் பார்த்திருக்கிறேன்," என்றேன்.

"சினிமாவிலா?" என்ற காம்பி முகம் சுளுக்கினார். "நான் அந்த கார்ட்டூன் கதாபாத்திரம் பற்றி பேசவில்லை, புகழ்பெற்ற நாட்டுப்புற கதையின் அலாவுதீனைப் பற்றி பேசுகிறேன்."

அலாவுதீன் என்ற ஏழை சிறுவன் ஒரு ரகசிய சுரங்கத்தில் ஒரு விளக்கைக் கண்டெடுத்தான். தற்செயலாக, விளக்கைத் தேய்த்த அலாவுதீன் ஒரு ஜீனி தோன்றியதைப் பார்த்தான். தனது ஒவ்வொரு ஆசையையும் நிறைவேற்றும் சக்தி அந்த ஜீனியிடம் இருப்பதை அறிந்தான். அந்த ஜீனியின் உதவியுடன் அலாவுதீன் பெரிய பணக்காரரானான். செல்லம் கொழிக்கும் ஒரு அரண்மனையைக் கட்டி ராஜாவின் அழகான மகளையும் மணமுடித்தான் என்பது தான் அந்தக் கதை.






காம்பி கதையை முடித்ததும், நான் விளக்கை வேகமாக தேய்த்து என் ஆசையைச் சொல்லிக்கொண்டேன். காம்பி சிரித்தார். பின்னர் அவர் அலமாரியில் இருந்து ஒரு விளக்கை எடுத்து அதன் பித்தளை பகுதியில் எழுதப்பட்ட வார்த்தையை சுட்டிக்காட்டினார். "இந்த பர்னரில் என்ன எழுதியிருக்கிறது பார்?" என்று கேட்டார்.
நான் "அலாவுதீன்" என்று எழுதியிருந்ததைப் படித்தேன்.
"மிகச் சரி. எதற்காக இந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்தார்களோ? ”என்று கண் சிமிட்டினார் காம்பி.
காம்பி சில சமயங்களில் அலாவுதீன் போன்ற கதைகளையும் சில சமயங்களில் உண்மையான கதைகளையும் எனக்குச் சொல்வார்.




"நான் கிராமப் புறத்தில் வளர்ந்தவன். மின்சாரம் வந்து அப்போது முப்பது வருடங்களுக்கும் மேலாகி இருந்தாலும் சாலைகளில் மின் கம்பங்கள் இல்லை. மேலும், பெரும்பாலான மக்களுக்கு மின்சாரக் கட்டணம் கட்டுப்படியாகவில்லை. விறகு அடுப்பில் தான் சமைப்போம். அந்த அடுப்பு சூட்டில் தான் வீடுகளை கதகதப்பாக வைத்திருந்தோம். வெளிச்சத்திற்காக நாங்கள் இதோ இந்த வகையான எண்ணெய் விளக்குகளை தான் பயன்படுத்தினோம்." என்றார் காம்பி.
அன்றிரவு நான் படுக்கும்போது காம்பி சிறுபையனாய் விளக்கின் வெளிச்சத்தில் படிப்பது போல கற்பனை செய்து பார்த்தேன்.

மறுநாள் விடிகாலையில் திடீரென்று விழிப்பு வந்துவிட்டது. மணி நான்கு பத்து தான் ஆகியிருந்தது. ஆனால் அதற்குள் அறையில் சூரிய ஒளி பிரகாசித்துக் கொண்டிருந்தது. காலையின் வழக்கமான ஒலிகள் எதுவும் கேட்கவில்லை. டிவியின் சத்தமில்லை. மைக்ரோவேவ் ஓவன் பீப்பின் சத்தமில்லை. குளிர்சாதன பெட்டியின் சத்தம் கூட கேட்கவில்லை. வெளியே வாகனங்கள் எதுவும் கூட ஓடவில்லை. ஒரே நிசப்தம்.
நான் உடனே ஜன்னலுக்கு வந்து வெளியே எட்டிப்பார்த்தேன். அதிர்ச்சியடைந்தேன். அனைத்து வீதிகளும் நடைபாதைகளும் முற்றிலும் பனியால் மூடப்பட்டிருந்தன. கூரைகளின் ஓரங்களில் இருந்து பனிக்கட்டிகள் தொங்கிக் கொண்டிருந்தன. வீடுகளுக்கு அருகே நிறுத்தப்பட்டிருந்த கார்கள் பனிப்பாறைகள் போல பளபளத்தன. வழுக்கும் சாலையில் ஒரு கார் கூட காணவில்லை. எங்குபார்த்தாலும் பிரகாசிக்கும் வெளிச்சத்தில் கண் கூசியது.



நேற்றிரவு பனிமழை பெய்தது என்றும் பனிப்புயலால் மின்சாரக் கம்பிகள் அறுந்ததால், வீட்டில் மின்சாரம் இல்லை என்றும் தாய் கூறினார். மேலும் "இன்று பள்ளிகளுக்கு விடுமுறை. மக்கள் வாகனங்களை ஓட்ட முயற்சிக்கக்கூடாது. முழு நகரத்திலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது." என்று வானொலிப் பெட்டியில் எச்சரிப்பு அறிக்கை வந்ததாக சொன்னார்.
நாங்கள் காலை முழுவதையும் வீட்டிற்குள்ளேயே கழித்தோம். அன்றுதான் மின்சாரம் மூலம் எத்தனை வேலைகள் செய்யப்பட்டன என்பதை நான் உணர்ந்தேன். காம்பியும் அம்மாவும் காபி குடிக்க முடியவில்லை, ஏனென்றால் காபி தயாரிக்கும் இயந்திரம் இயங்கவில்லை. அடுப்பு வேலை செய்யவில்லை. மைக்ரோவேவ் ஓவன், டோஸ்டர் மற்றும் பாத்திரம் கழுவும் இயந்திரம் ஆகியவற்றை எங்களால் பயன்படுத்த முடியவில்லை. குளிர்சாதன பெட்டியில் வைக்கப்பட்ட உணவு கெட்டுவிடும் என்று அம்மா கவலைப்பட்டார். என்னால் கணினியில் விளையாட முடியவில்லை, டிவி பார்க்க முடியவில்லை. சுடு நீர் இல்லை, வீடே சில்லென்று இருந்தது.
நான் ஒரு புத்தகம் படித்தேன். பின்னர் அம்மாவும் நானும் சேர்ந்து ஜிக்சா புதிரைத் தீர்த்தோம். நண்பர்களிடம் தொலைபேசியில் பேசினேன். பிறகு நான் ஜன்னலுக்கு வெளியே வெறித்துக்கொண்டிருந்தேன், பனிக்கட்டிகள் உருகி தண்ணீர் சொட்டுவதைப் பார்த்தேன்.
பிற்பகல் ஆனபோது சூரியனின் வெப்பம் பனியின் பெரும்பகுதியை உருக்கி விட்டிருந்தது. "பிரெண்டா, காற்றாட வெளியே சென்று வருவோம்." என்றார் அம்மா. நாங்கள் இருவரும் வெளியே வந்தோம்.



காற்றாட நடக்கும் இந்த யோசனை அனைவரின் மனதிலும் வந்திருப்பதைக் கண்டோம். அக்கம்பக்கத்தினர் முதன்முறையாக ஒருவருக்கொருவர் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். வீட்டிற்கு வெளியே நாற்காலிகளைப் போட்டு சதுரங்கம் மற்றும் பிற விளையாட்டுகளை ஆடிக்கொண்டிருந்தனர். சிலர் உணவுப்பொருட்களை கரி அடுப்பில் சுட்டு ஒருவருக்கொருவர் வறுத்த உணவை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். முழு சுற்றுப்புறமும் மிகவும் நட்பாகவும் மகிழ்ச்சியாகவும் தோன்றியது.

சூரியன் மறைந்தது. வானம் மெல்ல இருட்டத் தொடங்கியது. தெருவே இருட்டறை போல கும்மிருட்டாகி விட்டது. காம்பி பல விளக்குகளுடன் வெளியே வந்தார். அந்த விளக்குகளில் மண்ணெண்ணெய் நிரப்பி ஏற்றி பின்னர் வீட்டின் முன்புறம் வைத்தார். அனைத்து விளக்குகளும் ஒளியுடன் பிரகாசித்தன.


"எங்களுக்கு இதுபோன்ற விளக்கு ஒன்று இரவல் கொடுக்க முடியுமா?" என்று எங்கள் வீட்டின் எதிர்வீட்டில் வசிப்பவர் கேட்டார்.

"மகிழ்ச்சியுடன்!," என்று சொன்ன காம்பி கையில் ஒரு விளக்கை எடுத்துக் கொண்டு நிலவறைக்குள் போனார். அவர் திரும்பி வந்தபோது ஒரு பெட்டி நிறைய விளக்குகள் கொண்டு வந்தார்.

பக்கத்து வீட்டார் அனைவரும் விளக்குகளை இரவல் பெற்று சென்றார்கள்.



இரண்டு நாட்களுக்கு மின்சார இணைப்பு இல்லை. மின்சாரம் வந்தபோது நான் மகிழ்ந்ததைவிட இதுபோன்ற ஒரு அழகான அனுபவம் எனக்கு கிட்டியதில் நான் பெருமகிழ்ச்சியடைந்தேன். காம்பியின் விளக்குகள் தங்கமயமான ஒளியை பரப்பிக்கொண்டு பிரகாசித்ததை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்.



முற்றும்